Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.184/2025 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 4 |
| | | Defence |
| | | Court |

Name : மாரியப்பன்

Father / Husband Name : கணேசன்

Village : திருச்சுழி

Taluk : திருச்சுழி

Caste :

Calling : சார்பு ஆய்வாளர்

Religion :

Age : 33

( எதிரி ஆஜரில்லை, மனுத்தாக்கல் செய்யப்பட்டு ஏற்கப்பட்டது. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 08.06.2026.

**முதல் விசாரணை :-**

1. நான் தற்போது விருதுநகர் மாவட்ட காவல்துறையில் சிறப்பு தனி

படைப்பிரிவில் திருச்சுழி உட்கோட்ட காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளாராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 19.02.2024 அன்று பரளச்சி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்தபோது காலை 10.00 மணியளவில் ரோந்து பணியில் தெற்கு நத்தம் கிராமத்தில் ஈடுபட்டிருந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி தெற்கு நத்தம் கிராமத்தில் அமைந்துள்ள எதிரி சேகர் அவர்களின் வீட்டின் பின்புறம் மஞ்சள் கலர் சாக்குப்பை ஒன்று இருந்தது. அந்த சாக்குப்பையில் என்ன பொருட்கள் உள்ளது என எதிரியிடம் கேட்ட போது அவர் முன்னுக்கு பின் முரணாக பதில் கூறினார்.

2. என்னுடன் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த முதல் நிலை காவலர் 306 பாலமுருகன், முதல் நிலை காவலர் 4120 அன்பு ஆகியோரும் உடன் இருந்தார்கள். நான் அந்த மஞ்சள் கலர் சாக்குப்பையை சோதனை செய்த போது அதில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட (1) 225 கிராம் எடை கொண்ட கணேஷ் 701 புகையிலை – 5 பாக்கெட்டுகள், (2) 100.8 கிராம் எடை கொண்ட கூலிப் புகையிலை – 1 பாக்கெட்டு ஆகியவை காணப்பட்டது. மேற்படி புகையிலை பொருட்களை பற்றி எதிரி சேகரிடம் விசாரித்தபோது புதூர் பகுதியில் பெயர், முகவரி தெரியாத ஒருவரிடம் வாங்கி வந்து அரசு அனுமதியின்றி சுயலாபத்திற்காக கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததாக கூறினார்.

3. தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லாத காரணத்தால் என்னுடன் ரோந்து பணிக்கு வந்திருந்த மேற்சொன்ன இரண்டு முதல் நிலை காவலர்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து மேற்சொன்ன பொருட்களை காலை 10.00 மணியளவில் கைப்பற்றினேன். பின்னர் எதிரியை கைது செய்து வழக்குச் சொத்துக்களுடன் எதிரியை

நிலையத்திற்கு பகல் 11.30 மணியளவில் அழைத்து வந்தேன். இது சம்மந்தமாக பரளச்சி காவல்நிலைய குற்ற எண் 9/2024, இதச பிரிவு 328 உ/இ 24 (1) COTPA Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் எதிரியின் கடையிலிருந்து அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை வாங்கி பயன்படுத்திய திரு.பிரமோத் மற்றும் திரு.ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். மேலும் எதிரியை அன்றைய தினமே நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மேற்சொன்ன முதல்நிலை காவலர்கள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேல் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

4. நான் பரளச்சியிலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டேன் என்பதை அன்றைய தினம் பொதுநாட்குறிப்பை பார்த்தால் தான் தெரியவரும். பரளச்சி காவல்நிலையத்திலிருந்து புறப்பட்டு மேலையூர், வடக்கு நத்தம் வழியாக தெற்கு நத்தத்திற்கு சென்றேன். பரளச்சி காவல்நிலையத்திலிருந்து தெற்கு நத்தம் கிராமம் சுமார் 6–7 கி.மீ தொலைவில் இருக்கும். சுமார் 9.50 மணியளவில் எனக்கு இரகசிய தகவல் கிடைத்தது. எதிரியிடம் சோதனை செய்வதற்கு முன்பாக நாங்களே சோதனை செய்யவா, அல்லது அரசிதழல் பதிவு பெற்ற நபர்கள் மூலம் சோதனை செய்யவா என கேட்டேன். அதற்கு எதிரி தாங்களே (நீங்கள்) சோதனை செய்யலாம் என கூறினார். எதிரியிடம் நான் மேற்சொன்ன கேள்வியை கேட்ட போது என்னுடன் வந்த காவலர்களும் உடன்

இருந்தார்கள்.

5. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் தங்களுடைய நீதிமன்ற சாட்சியத்தில் மேற்சொன்ன சங்கதிகளை கூறவில்லை என்றால் அவர்களிடம் கேட்டிருந்தால் அவர்கள் பதில் அளித்திருப்பார்கள் என்று சாட்சி கூறுகிறார். அ.சா.2 தன்னுடைய நீதிமன்ற சாட்சியத்தில் நான் எதிரியிடம் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தலையாரியை அழைத்து வந்து சோதனை செய்யவா என்று கேட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்பதால் நான் தவறுதலாக தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. சம்பவ இடத்தில் தனி நபர் சாட்சிகள் யாரும் இல்லை. அ.சா.3 பிரமோத் என்பவரை பரளச்சி கிராமத்தில் சம்பவ தினத்தன்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எத்தனை மணிக்கு விசாரித்தேன் என்று நினைவில்லை. அ.சா.3 பிரமோத் தன்னுடைய நீதிமன்ற சாட்சியத்தில் தான் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், தனக்கு புகையிலை பழக்கம் எதுவும் கிடையாது என்று சாட்சியமளித்துள்ளார் என்பதால் நான் சொன்னவாறு சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் அ.சா.3 யை விசாரிக்கவில்லை என்றும், அவர் என்னிடம் எந்த வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விவரக் கணக்கிற்காக எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை ஆய்வாளர் 02.05.2024 அன்று விசாரித்தார். மற்ற சாட்சிகளை ஆய்வாளர் மறு விசாரணை செய்யவில்லை. நான் சொன்ன மாதிரி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், கையிருப்பு சாட்சிகளின் துணைக்கொண்டு எதிரி மீது பொய் வழக்கு புனைந்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரி அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்யவில்லை என்றும், வழக்கு சொத்துக்கள் எதிரியிடமிருந்து

கைப்பற்றப்படவில்லை என்றும், காவல்நிலைய கையிருப்பில் இருந்த புகையிலை பொருட்களை வைத்து எதிரி மீது பொய் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.06.08 16:25:28 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.